DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | |
|---|---|---|---|---|
| CC / STC. No | .. .. **CC. 44 /2025** | | | |
| Deposition of Witness for | PW 2<br>Prosecution<br>Court | | | |
| Name | : **திரு. சண்முகம்** | Taluk | : | பெத்தநாயக்கன்பாளையம் |
| Father/Husband Name | : த.பெ. பொன்னுசாமி | Calling | : | சுயதொழில் |
| Village | : எடப்பட்டி | Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.11.2025

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

**துவக்க நேரம்** 12.21

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து பட்டறை வைத்து வேலை செய்து வருகிறேன்.

2. தேதி,மாதம் நினைவில்லை. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மதியம் 02.00 மணிக்கு மேல் இருக்கும் நான் எனது பட்டறையில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது எனது பட்டறைக்கு வந்தவர்கள் நெய்யமலை பிரிவு ரோடு அருகே பிள்ளையார் கோயில் நிறுத்தம் அருகே விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். நான் அதை பார்ப்பதற்காக சம்பவ இடத்திற்கு சென்றேன். அப்போது விபத்துக்குள்ளான நபரை 108 ஆம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்

3. மேலும் அந்த இடத்தில் இருசக்கர வாகனமும், பிக்கப் தோஸ்த் வண்டி இருந்தது. அந்த வண்டியின் பதிவெண் பார்க்கவில்லை. மேற்படி விபத்துக்குள்ளான நபர் எனது பக்கத்து ஊரான கத்திரிப்பட்டியை சேர்ந்தவர் அவரது உறவினருக்கு தகவல் தெரிவிக்குமாறு அங்கிருந்தவர்கள் பேசினார்கள். அதனால் நான் கத்திரிபட்டியில் எனக்கு

தெரிந்த நபரிடம் விபத்து குறித்து தகவல் தெரிவித்து அந்த தகவலை அடிப்பட்ட உறவினருக்கு தெரிவிக்குமாறு கூறினேன்.

4. அதன்பின்னிட்டு விபத்துக்குள்ளான நபர் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி, குவிமுச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்திருப்பதால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யவேண்டி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எடப்பட்டியில் தான் குடும்பத்தோடு வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு ஒருமகன் மற்றும் 04 மகள்கள் உள்ளனர் என்றால் சரிதான். விபத்தில் இறந்த ராமு எனது ஊர்க்காரர் என்றால் இல்லை. எனது பக்கத்து ஊர்க்காரர்.

2. எனது வீட்டிலிருந்து எனது பட்டறைக்கு எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 1 1/2 கி.மீ துாரம் இருக்கும். நான் எத்தனை வருடம் பட்டறை வேலை பார்த்து வருகிறேன் என்றால் சுமார் 10 -15 வருடங்கள் இருக்கும்.

3. கடந்த 15.05.2023 அன்று மாலை 04.30 மணியளவில் நெய்யமலை பிரிவு ரோடு அருகே நான் இருக்கும்போது, எங்க ஊரை சேர்ந்த ராமு என்பவர் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருக்கும்போது எதிர் திசையில் தும்பல் நோக்கி வந்த TN 54 M 6141 என்ற பதிவெண் கொண்ட தோஸ்த் லைலேண்ட் வாகனத்தின் ஓட்டுநர் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் வாகனத்தை ஒட்டி வந்து ராமு வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அந்த விபத்தில் ராமுவிற்கு வலது கால், வலது கை ஆகிய இடங்களில் பலத்தஅடி பட்டதாகவும், மேற்படி விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், மேலும் ராமுவின் மனைவிக்கு விபத்து குறித்து

தகவல் தெரிவித்ததாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கில் எதிரிக்கு ஆதரவாக முன்னுக்குபின் முரணாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

**முடிவு நேரம்.** 12.39

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA

Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.11.26 15:25:15 +0530

Judicial Magistrate No.1,
Attur.